மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் பணிகள், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகள் தொடர்பாக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் முனைவர் ஏ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், கூடுதல் ஆட்சியர் கோகுல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் – கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள்

13,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கில் சேமிக்கப்பட்டு வருகின்றன!

அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, அக்.24-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் மேலையூர் கிராமத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகளை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இவ்வாய்வின்போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குனர் முனைவர் ஏ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

இவ்வாய்வின்போது, உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் செய்வது தொடர்பாக தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தின்போது, நெல் விளைகின்ற அனைத்து மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களில் வாங்கப்படும் நெல்லினை பாதுகாக்க வேண்டும் எனவும், அதனை உடனடியாக நெல் அரவை ஆலைக்கு அனுப்ப வேண்டும் எனவும், வெளிமாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, 3 முறை முதலமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வுக்கூட்டத்தை நடத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், துறை சார்ந்த அலுவலர்களுடன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்போது, இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் எடுக்கப்பட்ட நெல்லின் ஈரப்பதம் 14.8 சதவீதம் உள்ளது. கடந்த காலங்களில் அக்டோபர் மாதங்களில் நெல் கொள்முதல் நடைபெற்று வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின், நான்கு ஆண்டுகளாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் செப்டம்பர் மாதத்திலேயே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லினை வாங்க வேண்டும் என்ற அடிப்படையில் நெல் கொள்முதல் பணிகள் நடந்து வருகிறது. இவ்வாண்டு, சன்னரகத்திற்கு ஊக்கத்தொகையை 156 ஆக உயர்த்தியும், பொதுரகத்திற்கு 131 ஆக உயர்த்தி, சாதாரண நெல்லுக்கான ஒரு குவிண்டாலின் விலை ரூ.2545 மும், பொதுரகத்திற்கான ஒரு குவிண்டாலின் விலை ரூ.2500 என உயர்த்தி தந்துள்ளார்கள். டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கோரிக்கைக்கிணங்க, நெல்லின் ஈரப்பதம் 22 சதவீதமாக உயர்த்தி தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாளது தேதியில் 700 அரிசி ஆலைகளில் 12 இலட்சம் மெட்ரிக் டன் மாதந்தோறும் அரைக்கின்ற அளவிற்கு அரவைத் திறனை கொண்டுள்ளோம். இதனுடன் செறிவூட்டப்பட்ட அரிசியை கலந்து பொதுமக்களுக்கு வழங்கவுள்ளோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றப் பின், ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 800 மூட்டைக்கு பதிலாக 1000 மூட்டைகள் வாங்க வேண்டும் என அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் ஒரு இயந்திரத்திற்கு பதிலாக நெல் அதிகமாக வரும் நேரங்களில் 2 இயந்திரங்கள் வைத்து 3000 மூட்டைகள் வரை வாங்கி வருகின்றோம். வரும் காலங்களில் ஒரே இடத்தில் 5000 மூட்டைகள் தானியங்கி முறையில் நெல் கொள்முதல் பணிகள்; நடைபெறுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 9 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தை பொறுத்தவரை 91 சதவீதம் அறுவடை முடிந்து விட்டது. மீதமுள்ள 9 சதவீதம் அறுவடை பணிகள் விரைவில் முடிவடைய உள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில், 144 எண்ணிக்கையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 1 இலட்சத்து 19 ஆயிரத்து 856 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டு, 93 ஆயிரத்து 640 மெட்ரிக் டன் நெல் பாதுகாப்பாக நகர்வு செய்யப்பட்டு;, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இருப்பில் உள்ள 26,396 மெட்ரிக் டன் நெல் பாதுகாப்பாக மூடி வைக்கப்பட்டு நகர்வு செய்யப்படும். லாரி மற்றும் இரயில்களின் மூலமாக நெல் நகர்வு செய்யப்பட்டு வருகிறது. கூடுதலாக வேளாண்மைத்துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கிடங்குகளில் 4396 மெட்ரிக் டன் நெல் மணிகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இக்குறுவை பருவத்தில் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட நெல் மணிகளை சேமிப்பதற்காக மல்லியம் பகுதியில் சுமார் 3500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தனியார் கிடங்கும் மற்றும் என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலையில் உள்ள சுமார் 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கில் தற்பொழுது நெல் சேமிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

தொடர்ந்து, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் பணிகள், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகள் தொடர்பாக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இவ்வாய்வின்போது, கூடுதல் ஆட்சியர் கோகுல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் திருமதி.நலினா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சேகர், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.அர்ச்சனா, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கமலக்கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது தொகுதிக்கு உட்பட்ட பொன்மலைப்பட்டி அந்தோணியார் கோவில் தெருவில் வசிக்கும் ஜாக்குலின் மேரி இல்லம் மழையால் சேதமடைந்த தகவல் அறிந்து இல்லத்திற்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து நிவாரணத் தொகை வழங்கி அரசு அதிகாரிகளிடம் அடுத்த கட்ட நிவாரண பணிகளை உடனே செய்து தர வேண்டும் என கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலெட்சுமி, மாநகரச் செயலாளர் மதிவாணன், பகுதிச் செயலாளர் தர்மராஜ், மாமன்ற உறுப்பினர் சித்தாலட்சுமி, வட்டச் செயலாளர் முருகானந்தம், தமிழ்மணி ஆகியோர் உடன் இருந்தனர்.

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமை!

நாகை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சிறப்புரை! ஆர்.அருள் செல்வம் – இரா.சங்கர் பங்கேற்பு!

கீழ்வேளூர், அக். 24 -

நாகை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் நாகை தொகுதி ஆர்.அருள்செல்வம், கீழ்வேளூர் தொகுதி இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்ட தேர்தல் பொறுப்பாளரும்,கழக சட்ட திருத்த குழுத் தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ். சரவணன், பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த்,

சோ.பா மலர்வணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகர கழக செயலாளர்கள் இரா. மாரிமுத்து, மா.மீ. புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரிய சார்ல்ஸ், சி.சுப்பிரமணியம்,

முகமதுசுல்தான், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தலில் நாகை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம், வேதாரண்யம், கீழ்வேளூர் ஆகிய 3 சட்டமன்ற தொகுதியிலும் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிக்கும் வேட்பாளர்களை வெற்றி பெற செய்வது, 2026 தேர்தலில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் தி.மு.க.வை ஆட்சியில் அமர ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள் இப்போதே தேர்தல் பணியை விரைவுபடுத்திட வேண்டும் என்றும், தேர்தல் பணியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் மிகவும் தீவிரமாக தி.மு.க. அரசு சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறி 2026 சட்டமன்ற தேர்தலுக்கு அடித்தளம் அமைத்திட வேண்டும் என்றும், தலைமைக் கழகத்தால் பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பேடுகளை குறிப்பேடுகளை பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் முழு விபரத்தையும் பூர்த்தி செய்து 2026 தேர்தல் பணியை எளிமையாக்கிட உதவிட வேண்டும் என்றும், இந்த பணியை ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் கண்காணிக்க வேண்டும், தமிழ்நாடு அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனடைந்த குடும்பத்தின் விவரங்களையும், இதுவரை எந்த அரசு திட்டத்திலும் பயனடையாதவர்கள் குடும்ப விவரத்தினை வாக்குச்சாவடி வாரியாக தயார் செய்தல் தலைமைக் கழகம் மூலம் சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும்,

விரைவில் வர இருக்கிற வாக்காளர் பட்டியல் சிறப்பு சீராய்வு முகாமை பயன்படுத்தி சேர்த்தல், நீக்கல் பணிகளை கிளை பாடு கழக செயலாளருடன் பாக நிலை முகவர்கள் இணைந்து பணியாற்றிட வேண்டும் என்றும், வாக்குச்சாவடிக்கு நேரடியாக வந்து வாக்கு செலுத்த இயலாத நிலையில் உள்ள வயது முதிர்ந்தவர்கள் பட்டியல் தயார் செய்வது எனவும்,

புதிய மற்றும் இளம் வாக்காளர்களை கண்டறிந்து வாக்குச்சாவடி வாரியாக பட்டியல் தயார் செய்வதோடு,

மாற்றுத்திறனாளிகள் விவர பட்டியல் வாக்குச்சாவடி வாரியாக தயார் செய்திட வேண்டும், BLA 2, BLC மற்றும் BDA(பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்) ஆகியோர்களுக்கு உரிய பணியை ஒதுக்கீடு செய்து தொடர்ந்து அவர்களை மேற்பார்வையிட வேண்டும் எனவும், தலைமை கழகத்தால் வழங்கப்பட்டுள்ள பாக முகவர் கையேடுகளை விரைவில் முடித்துக்கொடுத்துட வேண்டும்.

நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் ஒன்றிய அமைப்பாளர்கள் வாக்குகள், எந்தெந்த வாக்குச்சாவடியில் உள்ளது என்ற பட்டியல் ஏற்கனவே தலைமை கழகத்திற்கு வழங்கியுள்ள நிலை இருப்பினும் அவர்கள் தற்போது வாக்குச்சாவடி மாறியிருப்பின் அதனையும் சேர்த்து புதிய பட்டியல் தயார் செய்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுமக்களின் கோரிக்கையின்படி – அக். 24 மற்றும் 27 தேதிகளில்

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் வில்லைகள்!

பதிவுத் துறை அறிவிப்பு!

சென்னை, அக். 24 -

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஐப்பசி மாதத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படும் என தமிழ்நாடு அரசு பதிவுத் துறை அறிவித்துள்ளது.

மங்களகரமான தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது ஐப்பசி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த நாட்களான 24.10.2025 மற்றும் 27.10.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

இதனை ஏற்று ஐப்பசி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த நாட்களான 24.10.2025 மற்றும் 27.10.2025 தேதிகளில், ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100-க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆலோசனையின் படி திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாகமுகவர்கள் BLA2 மற்றும் BDA ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன் தலைமையில், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ப.ராம்குட்டி (எ) ராமமூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மணலி 2வது மண்டலத்தில்

500 நபர்களுக்கு பரிசுப் பொருட்கள்!

ஏ.வி.ஆறுமுகம் வழங்கினார்!

சென்னை, அக்.24 -

மணலி 2வது மண்டலத்திற்குட்பட்ட பல்வேறு பணியாளர்கள் 500 பேருக்கு பகுதிச் செயலாளரும் மண்டலக்குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைப்படி பெருநகர சென்னை மாநகராட்சி மணலி 2வது மண்டலம் மணலிக்குட்பட்ட சாலைப் பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள் மற்றும் NULM பணியாளர்கள் என 500 நபர்களுக்கு அனைவருக்கும் பண்டிகையை முன்னிட்டு மண்டல குழுத் தலைவர் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் பட்டாசுகள் மற்றும் இனிப்புகள் வழங்கினார்.

அதுபோது கழக நிர்வாகிகள் பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அர. நடராசன்

அக்டோபர் 24 (1987)

இளம்வயதிலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கிளைச் செயலாளர், உப்பிலியாபுரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.

நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.